தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## விவசாயிகள் சங்க அலுவலகம் தாக்குதல்

First Published : 26 Feb 2011 10:35:57 AM IST

தாராபுரம், பிப். 25: தாராபுரத்தில் விவசாயிகள் சங்க அலுவலம் மீது நடத்தப்பட்ட தாகுதல் தொடர்பாக போலீஸô ர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாராபும்-பொள்ளாச்சி சாலையில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க அலுவலகம் அந்துள்ளது.

இங்கு, வியாழக்கிழமை இரவு நுழைந்த மர்ம நபர்கள், அங்கிருந்த டேபிள், சேர், டிவி ஆகியவற்றை உடைத்தனர்.

மேலும், அங்கு நிறுத்தப்பட்டிருந்த, திருப்பூர் மாவட்டத் தலைவர் காளிமுத்துவின் காரையும் அடித்துச் சேதப்படுத்தினர். இது தொடர்பாக தாராபுரம் போலீஸில் புகார் செய்யப்பட்டது. போலீஸô ர் வழக்குப்பதிந்து, அலுவலகத்தைத் தாக்கிய நபர்கள் குறித்து விசாரித்து வருகின்றனர்.

## விளைபொருள்களுக்கு நியாயமான கொள்முதல் விலை வழங்கக் கோரிக்கை

First Published : 26 Feb 2011 11:05:20 AM IST

நாமக்கல், பிப்.25: வேளாண் விளைபொருள்களுக்கு நியாயமான கொள்முதல் விலை வழங்க வேண்டும் என தமிழ்நாடு கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

÷அந்த அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் ஒருங்கிணைப்பாளர் செ. நல்லசாமி முன்னிலையில் நாமக்கல்லில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

÷கடந்த 4 ஆண்டுகளாக உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் சான்றிதழ் பெற்ற விதைகளின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது. இவற்றின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக விலையை அதிகரிக்கும் வகையில் அரசின் செயல்பாடு இருக்கிறது. இதனால் விவசாயத்துக்கான முதலீடு அதிகரித்துவிட்டது. ÷இவ்வாறு அதிக செலவு செய்து விவசாயம் செய்தாலும், விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இதன் காரணமாக அதிக நஷ்டம் ஏற்படக் கூடிய தொழிலாக விவசாயம் மாறி வருகிறது.

÷அரசு கொள்முதல் செய்யும் நெல், கரும்பு, மஞ்சள், பருத்தி ஆகிய விவசாயப் பொருள்களுக்கு குறைந்தபட்ச விலைதான் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகின்றனர். இந்த நிலை தொடர்ந்தால், ஆயிரக்கணக்கான விவசாயிகள், தங்களது தொழிலைக் கைவிடும் அவல நிலை உருவாகும்.

÷அண்மையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் விவசாயிகளுக்கு இலவசமாக செல்போன்களை வழங்க வேண்டும் என அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. வேளாண் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கொடுப்பதற்கு பதில் இத்தகைய இலவச திட்டங்களை அறிவித்து, விவசாயிகளை ஏமாற்றும் நோக்கில் தமிழக அரசு செயல்படுகிறது என்றார்.

தினமலர்

**விவசாய மின்வெட்டை கண்டித்து கறுப்பு பேட்ஜ் : வேளாண் குறைதீர் கூட்டத்தில் காரசாரம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 26,2011,00:21 IST

ஈரோடு: "விவசாயிகளுக்கு நடைமுறைபடுத்தியுள்ள 80 சதவீத மின்வெட்டை உடனடியாக திரும்ப பெற வேண்டும்' என, விவசாயிகள் காரசாரமாக பேசினர்.ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. கூட்ட விவாதம்: தமிழக விவசாயிகள் சங்க அமைப்பாளர் பொன்னையன்: கிராமப்புற விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பகலில் ஆறு மணி நேரம், இரவில் நான்கு மணி நேரம் மின்சாரம் வழங்க சென்றாண்டு மின்வாரியம் ஆணையிட்டது. இதுவே 60 சதவீத மின்வெட்டு. ஃபிப்ரவரி 3ம் தேதி முதல் மின் விநியோக அளவு படிப்படியாக குறைக்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் எந்த பகுதியிலும் நான்கு மணி நேரம் தடையில்லா மின்சாரம் வழங்குவதில்லை. இரவை பாசன விவசாயிகள் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டு பெரும் பொருள் நஷ்டத்துக்கு ஆளாகிறோம். சொட்டுநீர் பாசன அமைப்புகள் வெற்றிகரமாக செயல்பட மும்முனை மின்சாரம் அதிக நேரம் வழங்க வேண்டும்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சுப்பு: எந்த நேரம் மின்சாரம் வரும்; எப்போது போகும் என தெரிவதில்லை. அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதால், மோட்டார் பாதிப்பு ஏற்படுகிறது. பாசன வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதில் சிரமம் ஏற்படுகிறது. மேட்டூர் வலதுகரை வாய்க்கால் சங்கத் தலைவர் மோகன்: இரவில் வழங்கும் மின்சாரத்தை விவசாயிகள் பயன்படுத்தவே முடியாது. அடிக்கடி மின்தடையால், கிராமப்புற குடிநீர் விநியோகம் பெரும் பாதிப்புக்கு ஆளாகிறது. மின்வாரிய அதிகாரி: கிராமப்புற விவசாயிகளுக்கு தினமும் ஆறு மணி

நேரம் மின்சாரம் தொடர்ந்து கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.டி.ஆர்.ஓ.,: தடையில்லா மின்சாரம் வழங்க உறுதி செய்யப்படும். இது தொடர்பாக அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். விவசாயிகளுக்கு சீரான மின்சாரம் வழங்காததை கண்டித்து, பெரும்பாலான விவசாயிகள் கறுப்பு பேட்ஜ் அணிந்து வந்தனர்.

**மரப்பயிரில் பூச்சி தாக்குதல்**

""பஞ்சு அசுவனி பூச்சியால், இலவம் பஞ்சு வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது," என, கூறிய, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி, கூட்டத்தில் பூச்சி தாக்கிய இலவம் பஞ்சை காண்பித்தார். ""இதே நிலை நீடித்தால் அனைத்து மரப்பயிர்களும் பாதிக்கப்படும்," என்றார்.வேளாண் அதிகாரி கூறுகையில், ""இலவம் பஞ்சில் தாக்கப்பட்டது பஞ்சு அசுவனி பூச்சி தாக்குதல் அல்ல; பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதலால்தான் இலவம் பஞ்சு பாதிக்கப்பட்டுள்ளது. மாவுப்பூச்சி தாக்குதல் வெளிநாட்டில் இருந்து, இந்தியாவுக்கு பரவியுள்ளது; விரைவில் கட்டுப்படுத்தப்படும்," என்றார்.

**பம்முது பாமாயில்: வாட்டுது வத்தல் விலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 26,2011,21:32 IST

விருதுநகர் : விருதுநகர் மார்க்கெட்டில், ஏறிய வேகத்தில் பாமாயில் விலை டின்னுக்கு 35 ரூபாய் குறைந்தது. புது மிளகாய் வத்தல் வரத்து இல்லாததால் மூடைக்கு 500 ரூபாய் உயர்ந்துள்ளது. சர்க்கரை மூடைக்கு 10 ரூபாய் குறைந்துள்ளது. விருதுநகரில் சர்க்கரை விலை மூடைக்கு 2,905லிருந்து 2,895 ரூபாயாக குறைந்துள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,160 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் 730 ரூபாயாகவும் உள்ளது. பாமாயில் 990லிருந்து 955 ரூபாயாக குறைந்துள்ளது. விற்பனை இல்லாததால் எண்ணெய் விலை குறைந்துள்ளது. நிலக்கடலைப் பருப்பு 3,600 ஆகவும், கடலைப் புண்ணாக்கு 2,500 ரூபாயாக உள்ளது. பருப்பு: விருதுநகரில் நயம் உளுந்து விலை மூடைக்கு 4,600லிருந்து 4,500 வரையும், சுமார் ரகம் 4,000 லிருந்து 4,100 வரையும், பர்மா பருவட்டு 4,600 லிருந்து 4,700 ரூபாயாகவும் உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,000 லிருந்து 6,100 ஆகவும், பர்மா பருவட்டு 5,500 லிருந்து 5,600 ரூபாயாகவும் உள்ளது. நயம் துவரை 4,400 லிருந்து 4,200 ஆகவும், பொடி துவரை 3,400 ஆகவும், நயம் துவரம் பருப்பு 6,000 ஆகவும், பொடி துவரம் பருப்பு 5,200 ரூபாயாகவும் உள்ளது. நயம் பாசிப்பயறு 4,400லிருந்து 4,300 ஆகவும், லயன் பருவட்டு 4,900 ஆகவும், சுமார் ரகம் 3,700 ரூபாயாகவும் உள்ளது. நயம் பாசிப்பருப்பு 6,300 லிருந்து 6,200 ஆகவும், சுமார் ரகம்5,600லிருந்து 5,500 ரூபாயாக உள்ளது. மார்க்கெட் மந்த நிலையால் பருப்பு விற்பனை இல்லாமல் விலை நிலையாக உள்ளது. மைதா 2,180 ஆகவும், கொண்டைக்கடலை 2,700 ஆகவும் பொரிகடலை 2,100 ரூபாயாக உள்ளது.

மிளகாய் வத்தல்: விருதுநகரில் புது வத்தல் 9,000 லிருந்து 9,500 ஆக உயர்ந்துள்ளது. முண்டு புது வத்தல் 8,500 ரூபாயாக உள்ளது. சோடை வத்தல் 3,500 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும் உள்ளது. புது வத்தல் வரத்து குறைந்துள்ளதால் தட்டுப்பாடு காரணமாக மூடைக்கு 500 ரூபாய் உயர்ந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மழையால் முளை விட்ட நெற்கதிர் சோகத்தில் சாத்தூர் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 26,2011,21:31 IST

விருதுநகர் : விருதுநகர் நென்மேனி பாசன கண்மாய் மூலம் வன்னிமடை, போத்திரெட்டியபட்டி, கலிங்கப்பட்டி, இருக்கன்குடி, எம்.நாகலாபுரம், அணைக்கரைபட்டி ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் 2000 ஏக்கரில் நெல் பயிரிட்டனர். அறுவடை நேரத்தில் சமீபத்தில் பெய்த திடீர் மழையால் 400 ஏக்கர் நெற்கதிர்கள் நீரில் மூழ்கின. இதனால் முற்றிய நெற்கதிர்கள் பயிரிலேயே முளைத்து விட்டன.
நீர்ப்பாசன சங்க மாவட்ட தலைவர் ப.கருப்பையா கூறியதாவது: ஒரு ஏக்கருக்கு 13 ஆயிரம் ரூபாய் செலவு செய்தோம். நெற்கதிர்கள் நீரில் மூழ்கி முளைத்து விட்டதால் வியாபாரிகள் வாங்க மாட்டார்கள். ஏக்கருக்கு 36 மூடை நெல் கிடைக்க வேண்டியதில், 16 மூடை கிடைப்பதே பெரிய விஷயம். ஏனென்றால் பகுதிக்கும் மேற்பட்ட நெற்கதிர்கள் வயலிலேயே உதிர்ந்து முளைத்துவிட்டன, என்றார். ஆர். மாரிமுத்து, நென்மேனி பாசன சங்க தலைவர், கூறியதாவது: பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை, அரசு, நிவாரணம் வழங்கவேண்டும். மறுக்கப்படுமானால் தாலுகா அலுவலகம் முன் உண்ணாவிரதம், சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் பஸ் மறியல் செய்வோம், என்றார். பழனிசெல்வம், வேளாண் துணை இயக்குனர் கூறுகையில், ""நிலத்தை, தாலுகா அலுவலகத்தினர் ஆய்வு செய்த பின்னர் முடிவு செய்யப்படும்," என்றார்.

**ஸ்ரீவி.,யில் பதநீர் உற்பத்தி துவக்கம் : கொள்முதல் விலை உயர்த்த கோரிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 27,2011,22:01 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் பதநீர் உற்பத்தி தாமதமாக துவங்கி உள்ளது. கொள்முதல் விலையை உயர்த்த விவசாயிகள் கோரிக்கை வைத்து உள்ளனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், திருவண்ணாமலை, பகுதிகளில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பனைமரங்கள் உள்ளன. இவற்றை நம்பி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர். பொதுவாக, பதநீர் உற்பத்தி ஆண்டுதோறும் தைமாதம் துவங்கும், போதிய மழை பெய்யாததால் கடந்த வாரம் தான், பதநீர் உற்பத்தி துவங்கியது. இருநாட்களாக பெய்யும் மழையால், உற்பத்தி சிறிதளவு பாதிப்பு அடைந்தாலும், இந்த மழையால் புதிய பாளைகள் வந்து பதநீர் உற்பத்தி அதிகரிக்கும் என விவசாயிகள் நம்பிக்கையில் உள்ளனர்.

விவசாயி மாரிச்சாமி கூறியதாவது: கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டு பதநீர் உற்பத்தி அதிகமாக இருக்கும். ஸ்ரீவி., பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் லிட்டர் 10 ரூபாய்க்கு கொள்முதல் செய்தாலும் போதுமானதாக இல்லை. அரசும் தற்போது விலைவாசிபடி, கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், என்றார்.

**விவசாயிகளுக்கு உதவும் கூட்டுறவு சங்கங்கள் : சிவந்திபுரத்தில் சபாநாயகர் பெருமிதம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 26,2011,00:37 IST

திருநெல்வேலி : "ஏழை விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் மட்டுமே கடன் பெற முடியும்' என சிவந்திபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க புதிய கட்டடத்திறப்பு விழாவில் சபாநாயகர் ஆவுடையப்பன் பேசினார்.

சிவந்திபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க புதிய கட்டடத்திறப்பு விழா அடையக்கருங்குளத்தில் நடந்தது. சேரன்மகாதேவி துணைப்பதிவாளர் நரேந்திரகுமார் தலைமை வகித்தார். சங்க தனிஅலுவலர் சங்கரன் வரவேற்றார். மத்திய கூட்டுறவு பாங்க் பொதுமேலாளர் பாரதி, நபார்டு பாங்க் உதவி பொதுமேலாளர் சுரேஷ் முன்னிலை வகித்தனர். அம்பாசமுத்திரம் பஞ்., யூனியன் துணைத்தலைவர் சிவகுருநாதன் பேசினார்.

சபாநாயகர் ஆவுடையப்பன் சங்கக்கட்டடத்தை திறந்துவைத்தார். மகளிர்சுயஉதவிக்குழுவினருக்கு 1.20 லட்சம் ரூபாய் கடனுதவி, ஐந்து

கூட்டுப்பொறுப்புக்குழுக்களுக்கு கடனுதவி, காணிக்குடியிருப்பு மலைவாழ் மக்கள் சங்கத்திற்கு வேனை சபாநாயகர் வழங்கினார்.

அவர் பேசும்போது, ""அம்பாசமுத்திரம் பகுதியில் 24 கூட்டுறவுச்சங்கங்கள் உள்ளன. சிவந்திபுரம் கூட்டுறவுச்சங்கம் சிறப்பாக செயல்படுகிறது. விவசாயக்கடன்களை தள்ளுபடி செய்த கூட்டுறவுச்சங்கங்களுக்கு அதற்குரிய தொகையை முதல்வர் கருணாநிதி வழங்கினார். விவசாயிகளின் தேவையறிந்து கூட்டுறவுச்சங்கங்கள் உதவி வருகின்றன. ஏழை விவசாயிகள் கூட்டுறவுச்சங்கங்களில் மட்டுமே கடன் பெற முடியும்" என்றார்.

கல்லிடைக்குறிச்சி நகர பாங்க் தனிஅலுவலர் தெய்வநாயகம், அம்பாசமுத்திரம் கூட்டுறவு பாங்க் தனிஅலுவலர் ஆறுமுகம், கூட்டுறவு சார்பதிவாளர்கள் மீனாட்சிநாதன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனிஅலுவலர் ஸ்டான்லி, அயன்சிங்கம்பட்டி, அம்பாசமுத்திரம், ஆலடியூர், பிரமதேசம் கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள், மதுரா கோட்ஸ் பணியாளர் சங்க ஊழியர்கள் பங்கேற்றனர்.

**தரமற்ற விதைகள் விற்பனை 13 பேருக்கு அபராதம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 26,2011,00:29 IST

திருநெல்வேலி : அம்பாசமுத்திரத்தில் தரமற்ற விதைகளை விற்பனை செய்த 13 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

வள்ளியூர் விதை ஆய்வாளர் ஜோதிபாசு அம்பாசமுத்திரம் தாலுகா பகுதி விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டார். விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த விதைகளில் இருந்து மாதிரி எடுத்து பரிசோதனை நிலையத்திற்கு ஆய்வுக்கு அனுப்பினார். 3 விதை மாதிரிகள் முளைப்புத்திறன் குறைந்தவை என கண்டுபிடிக்கப்பட்டது. நெல்லை விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தரராஜன் உத்தரவுப்படி தரம் குறைந்த விதைகளை உற்பத்தி செய்தவர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள் உட்பட 13 பேர் மீது அம்பாசமுத்திரம் ஜே.எம். கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. 13 பேருக்கும் தலா 500 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு கூறப்பட்டது.

**பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை**

பிப்ரவரி 26,2011,00:00 IST

திருக்கனூர்: திருக்கனூர் விவசாயிகளுக்குப் புதிய நெல் ரகம், பயிர் பாதுகாப்பு குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. திருக்கனூர் உழவர் உதவியகத்தில் ஆத்மா நெல் ஆர்வலர் குழுக்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் அலுவலர் தமிழ்ச்செல்வன் வரவேற்றார். பயிற்சி வழி தொடர்பு திட்ட இணை வேளாண் இயக்குனர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார். முகாமை திட்ட இயக்குனர் ரவிபிரகாசம் துவக்கி வைத்தார். துணை வேளாண் இயக்குனர் சிவசண்முகம் வாழ்த்தி பேசினர்.வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் வல்லுனர் விஜயகுமார், உழவியல் வல்லுனர் ரவி விவசாயிகளுக்குப் புதிய நெல் ரகம், பயிர் பாதுகாப்புகள் குறித்து ஆலோசனை வழங்கினர். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மாசிலாமணி செல்வராசு, நந்தகோபால், பரசுராமன், அரிராமன், தயாளன், ராமலிங்கம் செய்திருந்தனர். வேளாண் அலுவலர் தினகரன் நன்றி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *பொருளாதார ஆய்வு அறிக்கையில் மத்திய நிதி அமைச்சர் தகவல்*

## *2011–12–ஆம் நிதி ஆண்டில் பொருளாதாரத்தில் 9% வளர்ச்சி ஏற்படும்*



## சிறப்பு அம்சங்கள்

- நாட்டின் பொருளாதாரத்தில், நடப்பு நிதி ஆண்டில் 8.6 சதவீத வளர்ச்சியும், வரும் நிதி ஆண்டில் 9 சதவீத வளர்ச்சியும் ஏற்படும்
- உணவு பொருள் பணவீக்கம் ஒரு சவாலாக உள்ளது.
- இரண்டாவது பசுமைப் புரட்சி மூலம் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும்.
- உணவு தானியங்கள் உற்பத்தி 23.21 கோடி டன்னாக உயரும் என மதிப்பீடு.
- வேளாண் துறை உற்பத்தி 0.4 சதவீதத்திலிருந்து 5.4 சதவீதமாக உயரும்.
- தொழில்துறை உற்பத்தியில் 8.6 சதவீத வளர்ச்சி ஏற்படும்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில், நிதி பற்றாக்குறை 4.8 சதவீதமாக இருக்கும். முந்தைய நிதி ஆண்டில் இது 6.3 சதவீதமாக இருந்தது.

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வு அறிக்கையை மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி வெள்ளிக்கிழமை அன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அதில், வரும் 2011–12–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் பொருளாதாரத்தில் வியக்கத்தக்க வகையில் 9 சதவீதம் வளர்ச்சி ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, பல்வேறு துறைகளிலும் எழுச்சி ஏற்பட்டிருந்த 2007–08–ஆம் நிதி ஆண்டின் வளர்ச்சிக்கு நிகரானது என்பது குறிப்பிடத்தக்கது.*

*இரண்டாவது பசுமை புரட்சி*

*கடந்த 2008–ஆம் ஆண்டில், உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார உருக்குலைவால், 2008–09 மற்றும் 2009–10–ஆம் நிதி ஆண்டுகளில் வளர்ச்சி முறையே 6.8 சதவீதம் மற்றும் 8 சதவீதமாக குறைந்து இருந்தது. இந்நிலையில், விவசாயம் மற்றும் தயாரிப்பு துறைகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தால், நடப்பு நிதி ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 8.6 சதவீதமாக உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்திய மக்கள் தொகையில், 60 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளை நம்பி உள்ளனர். நம் நாட்டில், உணவு பாதுகாப்பை உறுதி*

செய்வதற்காக, இரண்டாவது பசுமை புரட்சி மூலம் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் என பொருளாதார ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் உற்பத்தி

கடந்த 2009–ஆம் ஆண்டில், பல மாநிலங்களில் வறட்சி, புயல், வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்பட்டன. இதனையடுத்து, 2009–10–ஆம் நிதி ஆண்டில், வேளாண் துறை உற்பத்தி 0.4 சதவீதம் மட்டுமே உயர்ந்து இருந்தது. நடப்பு நிதி ஆண்டில், இத்துறையில் அமோக வளர்ச்சி (5.4 சதவீதம்) ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இத்துறையின் பங்களிப்பு 17.8 சதவீதமாக உள்ளது.

நடப்பு 2010–11–ஆம் வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்) நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 6.4 சதவீதம் (21.80 கோடி டன்) 23.21 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பணவீக்கம்

உணவு பொருள்களுக்கான பணவீக்கம் அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது என்று ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது. கடந்த 2009–ஆம் ஆண்டு ஜூன் 5–ந் தேதியிலிருந்து தொடர்ந்து 76 வாரங்களாக உணவு பணவீக்கம் இரட்டை இலக்கத்தில் உள்ளது. சென்ற நிதி ஆண்டில், உணவு தானியங்கள் உற்பத்தி குறைவாக இருந்ததால் பணவீக்கம் அதிகரித்து இருந்தது. ஆனால், நடப்பு நிதி ஆண்டில், தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்து வருவதால், பணவீக்கம் உயர்ந்துள்ளது. எனவே, பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி சென்ற ஓர் ஆண்டில் ஏழு முறை முக்கிய முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்தியது. மத்திய அரசு, குறிப்பிட்ட உணவு தானியங்கள் ஏற்றுமதிக்கு தடை விதித்ததுடன், சில உணவு பொருள்களுக்கான இறக்குமதி வரியையும் ரத்து செய்தது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உலக பொருளாதார நெருக்கடியின் மோசமான தாக்கத்தையும் சமாளித்து, நம் நாட்டில் கடந்த 2009–ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான காலத்தில், புதிதாக 4.35 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை கட்டமைப்பு வசதி

ஒரு நாட்டின் தங்கு தடையற்ற பொருளாதார வளர்ச்சிக்கு சாலை போக்குவரத்து, துறைமுக வசதி, மின்சாரம், குடிநீர் விநியோகம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் நன்றாக இருக்க வேண்டும். நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது

மாதங்களில், இத்துறை நிறுவனங்களுக்கு வங்கிகள் வழங்கிய கடன், சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 59 சதவீதம் (ரூ.64,322 கோடி) அதிகரித்து ரூ.1,02,301 கோடியாக உயர்ந்துள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

அடிப்படை கட்டமைப்பு திட்டங்களுக்கு தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு வாரியத்திடமிருந்து அனுமதி பெறுதல் போன்ற நடைமுறைகளை எளிமைப்படுத்த வேண்டும் என்றும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக ‘தேசிய நிலவள வங்கி’ ஒன்றையும் உருவாக்க வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவைத் துறை

நாட்டின் பொருளாதாரத்தில் 55.2 சதவீத பங்களிப்பை பெற்றுள்ள சேவைத் துறையில், நடப்பு நிதி ஆண்டில் 9.6 சதவீத வளர்ச்சி ஏற்படும் என ஆய்வு அறிக்கையில் முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. வங்கி, நிதி, காப்பீடு, ரியல் எஸ்டேட், சுற்றுலா, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், பீ.பி.ஓ. போன்றவை சேவை அளிப்புத் துறைகளாகும். நடப்பு நிதி ஆண்டில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பீ.பி.ஓ. சேவை துறைகளின் ஏற்றுமதியில் 18.5 சதவீதமும், உள்நாட்டு வர்த்தகத்தில் 22.8 சதவீதமும் வளர்ச்சி ஏற்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை கணக்கிடுவதில் 26.8 சதவீத பங்களிப்பை கொண்டுள்ள தொழில்துறை உற்பத்தியில், நடப்பு நிதி ஆண்டில் 8.6 சதவீத வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நுகர்வோர் சாதனங்கள் உள்ளிட்ட தயாரிப்பு துறையில் 9.1 சதவீத வளர்ச்சி ஏற்படும்.

சில்லரை வர்த்தகத் துறை

நம் நாட்டில் சில்லரை வர்த்தகத் துறையில் ‘சிங்கிள் பிராண்டு’ மற்றும் மொத்த விற்பனையில் அன்னிய நேரடி முதலீட்டிற்கு அனுமதி உள்ளது. அதேசமயம், பல பிராண்டு சில்லரை வர்த்தகத்தில் அனுமதி இல்லை. இதற்கு படிப்படியாக அனுமதி அளிக்க வேண்டும் என்ற ஆலோசனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளும், நுகர்வோரும் பயன்பெறுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

வரி விதிப்பு முறையிலும் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், நாட்டின் ஏற்றுமதி 29.5 சதவீதமும், இறக்குமதி 19 சதவீதமும் உயர்ந்துள்ளது. இதே காலத்தில், நாட்டின் வர்த்தக பற்றாக்குறை 8,201 கோடி டாலராக உள்ளது.

பொருள்கள் மற்றும் சேவைகளின் மொத்த ஏற்றுமதி, இறக்குமதியைக் காட்டிலும்

குறைவாக உள்ளதால், நடப்பு கணக்கு பற்றாக்குறை உயர்ந்து வருகிறது. இதனை ஈடுகட்டும் வகையில், நம் நாட்டில் 29,730 கோடி டாலர் மதிப்பிற்கு அன்னிய செலாவணி கையிருப்பு உள்ளது. உலகிலேயே அதிக அளவில் அன்னியச் செலாவணி கையிருப்பில் வைத்துள்ளதில் இந்தியா நான்காவது மிகப் பெரிய நாடாகத் திகழ்கிறது.

நிதி பற்றாக்குறை

உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார உருக்குலைவை எதிர்கொள்ளும் வகையில், மத்திய அரசு வழங்கிய சலுகைகளையடுத்து, கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில், நிதி பற்றாக்குறை 16 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு உயர்ந்து இருந்தது. இது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.3 சதவீதமாக இருந்தது. நடப்பு நிதி ஆண்டில், இது 4.8 சதவீதமாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் நிர்ணயிக்கப்பட்டிருந்த அளவான 5.5 சதவீதத்தைக் காட்டிலும் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது, பற்றாக்குறை ரூ.3,81,408 கோடி என மதிப்பிடப்பட்டு இருந்தது.

வரி விதிப்பு முறைகளில் சீர்திருத்தம், வேளாண் உற்பத்தியை அதிகரித்தல், அடிப்படை கட்டமைப்பு வசதிக்கு முக்கியத்துவம் அளித்தல் போன்ற நடவடிக்கைகளால், பொருளாதார வளர்ச்சியில் எழுச்சி காண வேண்டும் என ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உற்பத்தி அதிகரிக்கவில்லையென்றால் பாலுக்காக, இறக்குமதியை அதிகம் சார்ந்திருக்கும் நிலைமை உருவாகும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில், உற்பத்தியில் வளர்ச்சி ஏற்படவில்லையென்றால், அடுத்த பத்து ஆண்டுகளில், பாலுக்காக இறக்குமதியை அதிகம் சார்ந்திருக்கும் நிலைமை உருவாகும் என நேற்று வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா முதலிடம்

சர்வதேச அளவில், பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. நம் நாட்டில், பாலுக்கான தேவைப்பாடு, ஆண்டுக்கு சுமார் 60 லட்சம் டன் என்ற அளவில் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் பால் உற்பத்தி ஆண்டுக்கு 35 லட்சம் டன் என்ற

அளவில்தான் அதிகரித்து வருகிறது.

இந்தியாவில், அடுத்த 12 ஆண்டுகளில், பாலுக்கான தேவைப்பாடு 18 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பால் உற்பத்தி ஆண்டுக்கு 11.20 கோடி டன் என்ற அளவில் உள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கும்போது, 2021–22–ஆம் ஆண்டுக்குள், பால் உற்பத்தி ஆண்டுக்கு 5.5 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என கணக்கிடப்பட்டுள்ளது.

தனிநபர் பயன்பாடு

நம் நாட்டில், சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் ஒரு தனிநபருக்கு கிடைத்த பாலின் அளவு நாள் ஒன்றுக்கு சராசரியாக 263 கிராமாக இருந்தது. இது, சர்வதேச அளவில் 279.40 கிராமாக இருந்தது. எனவே சர்வதேச சராசரி அளவுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் ஒரு தனிநபருக்கு கிடைக்கும் பாலின் அளவு மிகவும் குறைவுதான்.

60 ஆண்டுகளில்...

கடந்த 60 ஆண்டுகளில் பால் உற்பத்தி கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. அதே சமயம் பசுமாடுகளின் பால் உற்பத்தி திறன் குறைவாக உள்ளது. பால் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளும், இன்னும் திருப்திகரமான அளவிற்கு மேம்படுத்தப்படவோ, நவீனமயமாக்கப்படவோ இல்லை என ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## வெளிநாடுகளில் நல்ல விலை கிடைப்பதால் அரிசி, கோதுமை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு திட்டம்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உள்நாட்டில் முக்கிய உணவு தானியங்கள் கையிருப்பு நன்றாக உள்ளது.

வெளிநாடுகளில் அரிசி, கோதுமைக்கு நல்ல விலை கிடைக்கிறது. இதனால் ஏற்றுமதி செய்வது குறித்து மத்திய அரசு ஆலோசித்து வருகிறது. கட்டுப்பாடற்ற வகையில் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி அளிப்பது குறித்தும் பரிசீலித்து வருகிறது.

கட்டுப்பாடுகள்

நம் நாடு அரிசி, கோதுமை உற்பத்தியில் சர்வதேச அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. உள்நாட்டு தேவையைக் கருத்தில் கொண்டு, கடந்த 2007–ஆம் ஆண்டிலிருந்து இந்த இரண்டு தானியங்களின் ஏற்றுமதியில் கடும் கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன. இந்த மூன்று ஆண்டுகளில் சில சந்தர்ப்பங்களில் மட்டும் குறைந்த அளவில் சில நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்தது.

நம் நாட்டில் பொதுவாக தேவைக்கும் அதிகமான அளவில் அரிசி, கோதுமை உற்பத்தி ஆகிறது. தற்போது தானியங்கள் கையிருப்பு வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது. பிப்ரவரி 1–ந் தேதி நிலவரப்படி அரசு சேமிப்புக் கிடங்குகளில் 1.94 கோடி டன் கோதுமை உள்ளது. இது, நிர்ணயித்த இலக்கான 82 லட்சம் டன்னுக்கு இரண்டு மடங்கிற்கு மேல் அதிகமாகும். அரிசி கையிருப்பு 2.78 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இதுவும் நிர்ணயித்த இலக்கை (1.18 கோடி டன்) விட இரண்டு மடங்கிற்கு மேல் கூடுதலாக உள்ளது.

சர்வதேச சந்தையில் இந்திய கோதுமையின் விலை டன் ஒன்றுக்கு 310 டாலர் என்ற அளவில் உள்ளது. பாகிஸ்தான் கோதுமை விலை 320–330 டாலராக உள்ளது. ஆனால் இரண்டு நாடுகளின் கோதுமையும் ஒரே தரம் கொண்டவையாகும். இதனால் இந்திய கோதுமைக்கு வெளிநாடுகளில் அதிக வரவேற்பு கிடைக்க வாய்ப்புள்ளது. நடப்பு நிதி ஆண்டில் கோதுமை உற்பத்தி 8.40 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே உபரி கோதுமையை ஏற்றுமதி செய்வதனால் அதிக அளவில் அன்னியச் செலாவணி வருவாய் ஈட்ட முடியும்.

சர்க்கரை உற்பத்தி

நம் நாட்டில் சர்க்கரை உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. நடப்பு 2010–11 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) 2.45 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சர்க்கரை கையிருப்பும் அதிகமாக உள்ளது. எனவே கட்டுப்பாடற்ற வகையில் 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்வது குறித்து மத்திய அமைச்சர்கள் குழு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. இது குறித்து விரைவில் இறுதி முடிவு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தினசரி வேளாண் தகவல்களை பெற

# 81 லட்சம் விவசாயிகளுக்கு இலவச செல்போன் வழங்கலாம்

## தமிழக அரசுக்கு, வேளாண் பல்கலைக்கழகம் கோரிக்கை

கோவை, பிப்.25–

தினசரி வேளாண் தகவல்களை பெற 81 லட்சம் விவசாயிகளுக்கு இலவச செல்போன் வழங்க கோவை வேளாண் பல்கலைக்கழகம் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்து உள்ளது.

### கருத்தரங்கு

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் பாசன பயிர் திட்டத்தில் பங்களிப்பு மற்றும் மேம்பாடு குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது.

நீர் நுட்பவியல் மைய இயக்குனர் சி.செல்லமுத்து தலைமை தாங்கினார். மண் மற்றும் நீர் பாதுகாப்பு பொறியியல் பேராசிரியர் மயில்சாமி வரவேற்றார். பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

### இ–விரிவாக்க திட்டம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இ–விரிவாக்க திட்ட செயல்பாட்டில் தேசிய அளவில் முன்னோடியாக திகழ்கிறது. வேளாண் பல்கலைக்கழக வலைதளம் வாயிலாக விவசாயிகள், விரிவாக பணியாளர்கள் மற்றும் அனைவருக்கும் வேளாண் தகவல்களை பெற அறிவு மற்றும் சேவைக் களஞ்சியமாக திகழ்கிறது. இந்த வலைதளம் தமிழக அரசு வலை தளமான அக்ரிஸ்நெட்டின் ஒரு அங்கமாகும். இந்த வலைதளம் மத்திய அரசின் இ–கவர்னன்ஸ் என்ற விருதை அண்மையில் பெற்று உள்ளது.

வேளாண் பல்கலைக்கழகம் பழங்கள், காய்கறிகள், மலர்கள், மலைப் பயிர்களின் விலை நிலவரங்களை விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ் மூலம் (குறுஞ் செய்திகள்) செல்போனுக்கு அனுப்புகிறது. மேலும் தினசரி உள்ளூர் சந்தைகளில் நிலவும் வேளாண் பொருட்களின் விலை நிலவரத்தை சேகரித்து சுமார் 25 ஆயிரம் விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ் வாயிலாக அனுப்பப்பட்டு வருகிறது. இதற்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு கிடைத்து உள்ளது. இதை கருத்தில் கொண்டு வேளாண் பல்கலைக்கழகம் 81 லட்சம் விவசாய குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இலவச செல்போன் வழங்க தமிழக அரசுக்கு திட்டம் ஒன்றை சமர்பித்து உள்ளது. இதன் மூலம் அனைத்து விவசாயிகளும் தினசரி வேளாண் பொருட்களின் விலை நிலவரங்களை பெற முடியும்.

### செம்மை கரும்பு சாகுபடி

மேலும் பல்கலைக்கழகம் அண்மையில் செம்மை கரும்பு சாகுபடி முறையை அறிமுகப்படுத்தி உள்ளது. இதற்கு முன்பு ஒரு ஏக்கர் கரும்பு பயிரிட 10 டன், 2 அல்லது 3 மொட்டு கரணைகளை பயன்படுத்தினார்கள். ஆனால் இந்த புதிய முறை வாயிலாக ஒரு எக்டேருக்கு சிறு சீவல் 12 ஆயிரம் பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் 247 டன் மகசூல் பெற முடிகிறது. இந்த முறையை விவசாயிகள் பின்பற்றினால் உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா முதல் இடத்தை பெற முடியும்.

இதே போல் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தி உள்ள ராஜராஜன்–1000 என்ற செம்மை நெல் சாகுபடி முறை தீவிரமாக பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் 40 சதவீதம் வரை தண்ணீரை மிச்சப்படுத்த முடியும். இந்த திட்டம் வாயிலாக மாநிலத்தில் உற்பத்தி ஆகும் நெல் விளைச்சல் 4 டன்னில் இருந்து 7 டன்னாக உயர்ந்து உள்ளது. எனவே தமிழகத்தில் நெல் பயிரிடப்படும் நிலப்பரப்பு குறைந்து இருந்தாலும் உற்பத்தி திறன் அதிகரித்துள்ள காரணத்தால், மொத்த நெல் உற்பத்தி உயர்ந்து உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

கருத்தரங்கில் உலக வங்கியின் முன்னாள் ஆலோசகர் ஆ.பாலசுப்பிரமணியம், ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த வேளாண் அலுவலர்கள் 20 பேர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.